**கவனிக்க.**- *2019.08.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2138 - 2019 අගෝස්තු මස 23 වැනි සිකුරාදා - 2019.08.23

*2138 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1436 | வரவு செலவுக் கூற்றுகள் | 1465 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1462 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) *ஈடு (திருத்தம்) சட்டமூலம், 2019, ஓகத்து 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம், 2019, ஓகத்து 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2019, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## கலேவெல பிரதேச சபை

*மத்திய மாகாண அரசாங்க சேவையில் கலேவெல பிரதேச சபையின் நிறுவகம்சார் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு*

*மத்திய மாகாண அரசாங்க சேவையில் கலேவெல பிரதேச சபையில் தற்போது நிலவும் ஆரம்பத்தர தேர்ச்சியற்ற பதவியணியின் நூலக உதவியாளர் தரம் III இல் நிரந்தரப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்புக்கெனப் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள கலேவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.*

**ஆரம்பத்தர தேர்ச்சியற்ற ஊழியர் வகுதி - திறந்த ஆட்சேர்ப்பு** *100%*

| தொ. இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | நூலக உதவியாளர் | 03 | ரூபா 24, 250– 10X250 – 10X270 – 10X300 – 12X330 – ரூபா 36,410<br><br>(பொ. நி. சு. இலக்கம் 03/2016 இன் II இற்கமைய சம்பளம் வழங்கப்படும்.<br><br>PL1 - 2016<br>சம்பளத்திட்டத்தின் 01 ஆவது படியின் ஆரம்பச் சம்பளமாகக் கருதப்படும் (04 ஆவது படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை தாண்டல் உண்டு) | **கல்வித் தகைமைகள்**<br><br>க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத 2 திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>**உடற் தகைமைகள்**<br><br>ஒவ்வொரு விண்ணப்பதாரியும் சிறந்த கண் பார்வை உடையோராகவும், திடகாத்திரமான உடலையும் நல்ல மனநிலையையும், சிறந்த நடத்தையையும் கொண்டோராக இருப்பதுடன் தீவின் எந்தப் பகுதியிலும் கடமையாற்றக்கூடிய பொருத்தமான உடற் தகைமையையும் கொண்டிருத்தல் வேண்டும். |

**02. தேவையான பொதுவான தகைமைகள்**

(i) விண்ணப்பதாரிகள் கலேவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் தொடராக 03 வருடத்துக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரிகள் வம்சாவளியாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(iii) சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(iv) பதவிக்கான ஆட்சேர்ப்புக்குரிய அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியான 2019.09.06 ஆந் திகதிக்கு நிறைவாகப் பெற்றிருத்தல் வேண்டும்.

**03. வயதெல்லை**

விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (குறித்த உள்ளூராட்சி அமையத்தில் ஏற்கனவே நிரந்தர சேவையில் உள்ளவர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை பொருந்தாது).

**04. பொதுவான தகைமைகள்**

01. குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டுத் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது.

02. அரச அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது. பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருத்தல் கூடாது.

03. கலேவெல பிரதேச சபையில் இற்றைவரை சமயோசித/பதிலீட்டு அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாட்களுக்கு விசேட முன்னுரிமை வழங்கப்படும்.

04. விண்ணப்பதாரிகள் குறித்த பதவியின் எதிரில் காட்டப்பட்டுள்ள ஆகக் குறைந்த கல்வித் தகைமைகளையும், தேவையேற்படின் தொழில்சார் தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**05. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதியம் உடையவை. ஓய்வூதிய முறைமை பற்றி அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

(ii) விதவைகள், அநாதைகள்/விதவைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(iii) நியமனம் மூன்று வருட கால தகுதிகாண் சேவைக் காலத்திற்கு உட்படுவர். ஏற்கனவே அரசாங்க சேவையில் நிரந்தர சேவையில் உள்ளோர் ஒருவருடப் பதிற்கடமைக்கு உட்படுவர்.

(iv) இந்தப் பதவி மாகாண அரசாங்க சேவைக்கு உரியதாகும்.

(v) தரம் III இல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருடகாலம் செல்ல முன்னர் 1 ஆவது தகுதிகாண் தடைதாண்டலிலும், தரம் II இற்குப் பதவி உயர்த்தப்பட்டு 03 வருட காலம் செல்ல முன்னர் 2 ஆவது தகுதிகாண் தடைதாண்டலிலும், தரம் I இற்குப் பதவி உயர்த்தப்பட்டு 05 வருடகாலம் செல்ல முன்னர் 3 ஆவது தகுதிகாண் தடை தாண்டலிலும் சித்தியடைதல் வேண்டும்.

(vi) பொ.நி.சு. 01/2014 ஆம் இலக்க ஏற்பாடுகளின் கீழ் நியமனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து 05 வருடங்கள் செல்லமுன்னர் ஒவ்வொரு பதவிக்கும் தேவையான ஏனைய அரச கரும மொழி பற்றிய புலமையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய காலத்துக்குள் இந்தத் தகுதியை நியமனம் பெற்றுக்கொண்ட தினத்திலிருந்து 05 வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ளத் தவறுவோரது சம்பள உயர்ச்சி இடைநிறுத்தப்படும்.

(vii) இந்த நியமனங்கள் தொடர்பில் தாபனக் கோவை ஏற்பாடுகளும், நிதிப் பிரமாணங்களும், மத்திய மாகாண நிதிப் பிரமாணங்கள், அரச/மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு காலத்துக்குக் காலம் விதிக்கும் பிரமாணங்களும் கட்டளைகளும், உள்ளூராட்சி அமையங்களுக்கான கட்டளைச் சட்டங்கள்/சட்டங்களும் ஏற்புடையதாகும்.

**06. ஆட்சேர்ப்பு முறை :**

1. கட்டமைப்பான நேர்முகத் தேர்வில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளது தொடரொழுங்கின்படி நிலவும் பதவி வெற்றிடங்களில் நிரப்பப்படுவர்.

2. கட்டமைப்பான நேர்முகத் தேர்வு : தகைமைகளைப் பரீட்சிப்பதற்கென நடத்தப்படும்.

| பரிசோதித்துப் புள்ளி வழங்கப்படும் தலைப்பு | அதிகூடிய புள்ளி | சித்தி பெறுவதற்குத் தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 40 | பொருத்தமற்றது. உச்ச அளவுப் புள்ளிகளைப் பெறுவோர் வெற்றிடங்களுக்கமையத் தேர்ந்தெடுக்கப்படுவர் |
| அனுபவம் | 55 | |
| நேர்முகத் தேர்வில் காட்டும் தேர்ச்சி | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

(வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பின்போது உரிய உள்ளூராட்சி அமையத்தில் ஏற்கனவே சேவையாற்றுவோர் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படலாம்.)

I. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். முதற்பிரதிகள் நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி ;
(iii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iv) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரது சான்றிதழ் (பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய) ;
(v) தொழில் அல்லது அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் இருப்பின் அவை. (அரசாங்க/உள்ளூராட்சி சேவையிலுள்ளோர் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.) ;
(vi) குணநலச் சான்றிதழ் ;

II. உரிய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

**07. விண்ணப்பங்கள்**

i. இந்த விளம்பரத்தில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2019.09.06 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கலேவெல பிரதேச சபை, கலேவெல" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மத்திய மாகாண அரசாங்க சேவையில் கலேவெல பிரதேச சபையின் தரம் III இற்கான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

ii. பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

iii. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையெழுத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க சேவையில் உயர் பதவி வகிப்போர் ஆகியோருள் ஒருவர் தமது பதவி முத்திரையை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

கே. அபேரத்ன,
செயலாளர்,
கலேவெல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கலேவெல,
2019, யூலை 30.

| |
|---|
| |

(அலுவலகப் பாவனைக்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கலேவெல பிரதேச சபை**

**மத்திய மாகாண அரசாங்க சேவையின் கலேவெல பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள ..................................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

01. i. முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) ..................................................................

ii. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) ..........................................

iii. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) ..............................................................................................

iv. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02 i. நிரந்தர முகவரி : ..............................................................................................................

ii. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

03. i. பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

ii. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

04. (ஆண்/பெண்) : ............................................

ஆண் - 0
பெண் - 1

05. இலங்கைப் பிரசையாவது பிறப்பின் மூலமா? அல்லது பதிவின் மூலமா? : ..................................................

06. கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சா.த.) பரீட்சை

வருடம் : .................................... மாதம் : ....................................

சுட்டிலக்கம் : ....................................

பெறுபேறு :

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

க.பொ.த. (உ.த.) பரீட்சை

வருடம் : .................................... மாதம் : ....................................

சுட்டிலக்கம் : ....................................

பெறுபேறு :

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

07. சேவை அனுபவம் மற்றும் தொழிற் தகைமைகள் :

..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

08. தற்போது கலேவெல பிரதேச சபையில் பணியாற்றுவதாயின் சேவைக் காலம் :

..........................................................................................................................................

09. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நியமனத்துக்கு முன்னரோ அல்லது பின்னரோ கண்டுபிடிக்கப்பட்டால் நான் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி ................................

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்
இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் ...................................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும் அவர் ....................... ஆந் திகதி எனது முன்னிலையில் மேற்குறித்த 09 ஆம் பந்தியின் கீழ் கையொப்பம் இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்துபவர் பெயர் : ................................................................................
பதவி : ..........................................................................................
முகவரி : (பதவி முத்திரையை இடவும்) ...............................................................................

**நிறுவனத் தலைவரது உறுதியுரை**
**தற்போது அரசாங்க சேவையிலுள்ளோருக்கான திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி .......................................................... என்பவர் இந்த நிறுவனத்தில் ............................ ஆந் திகதி முதல் ..................................... ஆகப் பணியாற்றுகிறார் எனவும், அவர் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், இந்தப் பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

................................,
திணைக்களத் தலைவரது கையொப்பம்

திகதி ................................

8 - 803

---

**பலப்பிடிய பிரதேச சபை**

தென்மாகாண சபை அரசாங்க சேவையில் பதவி வெற்றிடங்கள்

தென் மாகாண அரசாங்க சேவையில் பலப்பிடிய பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள சுகாதார சிற்றூழியர் பதவிக்காக கீழ்க் குறிப்பிட்டுள்ள தகைமைகளையுடைய தென் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடமுள்ள ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவி எண்ணிக்கை | சேவை வகை மற்றும் வகுப்பு | சம்பள அளவுத்திடம் | குறைந்த பட்ச கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|
| 01 | சுகாதார சிற்றூழியர் | 01 | ஆரம்ப மட்டத் தேர்ச்சி அற்ற III | பொ. நி. சு. 03/2016 இற்கமைய PL 1 - 2016 ரூபா 24,250 - 250 x 10 - 270 x 10 - 300 x 10 - 330 x 12 - ரூபா 36,410 | குறைந்தபட்சம் 8 ஆம் தர/9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் |

**02. வயதெல்லை :**

(i) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) தற்போது அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஆகக் கூடிய வயது எல்லை தேவைப்படமாட்டாது. (இவ்வாறான விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்)

**03. பொதுத் தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் பரம்பரை மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் தினத்திற்கு அண்மித்த 03 வருடகாலம் தென் மாகாண சபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருக்க வேண்டும். பலப்பிடிய பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iii) சிறந்த ஒழுக்கமுடையவராகவும் ஆரோக்கியமான உடல் நலத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iv) குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.

(v) குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.

(vi) விண்ணப்பதாரிகள் குறித்த பதவிகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதியன்று பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**04. ஆர்சேர்ப்பு தொடர்பான பொதுத் தகைமைகள் :**

(i) விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது ஆட்சேர்ப்பு பிற்போடல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது அறிவித்தலை இரத்துச்செய்தல் அல்லது திருத்தங்களை மேற்கொள்ளல் போன்ற எல்லா அதிகாரங்களும் பலப்பிடிய பிரதேச சபைத் தலைவருக்கு உரியது.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மூன்று மாதத்திற்குள் வைத்திய பரிசோததனைக்கு தோற்ற வேண்டும் என்பதுடன் அப்பரிசோதனையில் உடல் மற்றும் உள நிலைமை சீரற்றதாகக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

**05. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய சம்பளத்திற்கு உட்பட்டதுமாகும். உமக்கு உரித்தான ஓய்வூதியச் சம்பளத் திட்டம் தொடர்பாக அரசினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு நீர் உள்ளீர்க்கப்படுவீர். விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுவோர் 03 வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(iii) இவ்வாட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும் அரசாங்க திணைக்கள கட்டளைகளுக்கும் தென் மாகாண சபை, தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பலப்பிடிய பிரதேச சபையினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைய ஒழுகுவதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

**06. ஆட்சேர்ப்பு செய்யும் முறை :**

விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பு விதிகளின் 01 ஆம் இணைப்பின் அடிப்படையில் கீழ்க் குறிப்பிட்டுள்ள முறையில் பெற்றுக்கொண்ட அதிகூடிய புள்ளிகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான நிலை | | அதிகூடிய புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்காக குறைந்த புள்ளி மட்டம் |
|---|---|---|---|
| 01 | கல்வித் தகைமை | 30 | 50% |
| 02 | ஏனைய தகைமைகள் (அட்டவணை 02 உடன் தொடர்புடையது) | 10 | |
| 03 | அனுபவம் (அட்டவணை 02 உடன் தொடர்புடையது) | 10 | |
| 04 | வதிவிடம் சபை எல்லைக்குள் (ஒவ்வொரு வருடங்களுக்கும் 5 புள்ளிகள் வீதம்) | 45 | |
| 05 | நேர்முகப் பரீட்சையில் காட்டிய தேர்ச்சி | 05 | |
| | மொத்தம் | 100 | |

**குறிப்பு:**

1. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது அடிப்படைத் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.
2. அடிப்படைத் தமைமைகளைப் பூரத்திசெய்த விண்ணப்பதாரிகளில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் தேர்ச்சி அடிப்படையில் மற்றும் வெற்றிடமாகவுள்ள தொகைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு நடைபெறும்.

**07. விண்ணப்பிக்கும் முறை :**

விண்ணப்பதாரிகள் கீழே வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க 12"x 8" (A4) அளவுடைய தாளில் தாங்கள் விண்ணப்பங்களை தயாரித்து 2019. 09. 16 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் "தலைவர், பலப்பிடிய பிரதேச சபை, பலப்பிடிய." எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உரிய பதவியினைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள அறிவுருத்தல்களுக்குப் புரம்பான, பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

08. விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. தேசிய ஆளடையாள அடடையின் பிரதி ஒன்று ;
3. கல்விச் சான்றிதழ்/மாணவர் செயற்பாட்டு அறிக்கை ;
4. வதிவிடத்தை உறுதிப்படுத்தல். (வதிவிடம் தொடர்பாக கிராம அலுவலரால் வழங்கப்படும் சான்றிதழை சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரினால் சுருக்கெழுத்து கையொப்பமிடப்பட்ட 6 மாதத்திற்குள் பெற்றுக்கொண்ட கிராம அலுவலர் சான்றிதழ்) ;
5. அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ்கள் 02 ;
6. தொழில் அனுபவ சான்றிதழ் (இருப்பின்) ;
7. சேவை அனுபவச் சான்றிதழ் ;
8. ஏதாவது குற்றம் தொடர்பாக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக கருதப்படாதவராக மற்றும் அவ்வாறான குற்றங்கள் தொடர்பாக தற்பொழுது பரிசீலணைக்கு உட்படாதவரென உறுதிப்படுத்தும் பொலிஸ் சான்றிதழ் ;

09. இவ்வறிவித்தலின் தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்பில் ஏதாவது தெளிவின்மை ஏற்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலை பார்க்கவும்.

என். ஸமன் த சில்வா,
தலைவர்,
பலப்பிடிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பலப்பிடிய,
2019, ஒகத்து 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தென்மாகாண அரசாங்க சேவையில் பலப்பிடிய பிரதேச சபையில் சுகாதார சிற்றூழியர் பதவிக்கான விண்ணப்பம்.**

01. (i) முதலெழுத்துக்களுடன் பெயர்: ..........................................................................................

(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள்: ..........................................................................

02. நிரந்தர வதிவிட மாவட்டம் : ..........................................................................

03. பிரதேச செயலாளர் பிரிவு : ..........................................................................................

04. நிரந்தர முகவரி : ..........................................................................................................

05. தேசிய ஆளடையாள அட்டை இல. : ..........................................................................

06. பால் : ஆண் / பெண் : ........................

07. பிறந்த திகதி : ஆண்டு : .................. மாதம் : .................. திகதி : ..................

08. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : .................. மாதங்கள் : .................. நாட்கள் : ..................

09. நீர் இலங்கைப் பிரசையாயின், வம்சாவழி மூலமா? அல்லது பதிவின் மூலமா? : ....................................

10. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய பரீட்சைகள் விபரம்) (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) : ........................

11. தொழில் மற்றும் வேறு தகைமைகள்(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கவும்) : ....................................

12. விண்ணப்பதாரி தற்போது சேவையில் உள்ளவராயின் :

i. பதவி : ..........................................................................................................

ii. சேவை செய்யும் அலுவலகம் : ..........................................................................................

iii. அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி : ..........................................................................

13. நீர் ஏதாவது நீதிமன்றத் தண்டனைக்கு ஆளாகியுள்ளீரா ?

14. விண்ணப்பதாரியின் சான்று:

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மை என்றும் சரியானது என்றும், இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மைக்குப் புறம்பானது என்று நான் அந்தப்

பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரிய வரும் இடத்து நான் தகுதியற்றவன் என்று கருதப்படுவேன் என்றும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரிய வரும் இடத்து எந்த விதமான நட்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உடன்படுகின்றேன்.

................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி ................................

15. அரச மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்:

அவ்விண்ணப்பதாரி ................................ திரு/ திருமதி/ செல்வி என்பவர் தற்பொழுது இந்நிறுவனத்தில் ................................ ஆக கடமையாற்றுகிறார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்தவிதமான ஒழுக்காற்று நடவடிக்கைக்காக தண்டனை பெறவில்லை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்/ உறுதிப்படுத்தவில்லை.

................................,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திகதி ................................

08 – 849

---

## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கென இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 03 வருடங்களுக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திடம் | கல்வித்தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 01 | சுகாதாரத் தொழிலாளர் தரம் III | 07 | (03/2016 பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைய) PL 1 - 2016 ரூபா 24,250 - 10 x 250 - 10 x 270 - - 10 x 300 - 12 x 330 - ரூபா 36,410/- | இரு அமர்வுகளுக்கு மேற்படாது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

மேற்குறித்த தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் தகைமைகள் தரம் 5 சித்தி ஆகக் குறைக்கப்பட்டு ஆட்சேர்ப்புக்கான குறைந்த தகைமையாகக் கொள்ளப்படும்.

**உடற் தகைமை :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பகல் மற்றும் இரவுக் காலங்களில் சேவையாற்றக்கூடிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும். சிறந்த நன்னடத்தை உடையவராகவும், தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையில் ஈடுபடுவதற்குரிய பொருத்தமான உடல்நிலை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :**

கட்டமைப்பான நேர்முகத் தேர்வில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளது தொடரொழுங்கின்படி நிலவும் பதவி வெற்றிடங்களில் நிரப்பப்படுவர்.

**கட்டமைப்பான நேர்முகத் தேர்வு**

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய தலைப்பு | அதிகூடிய புள்ளிகள் | சித்தி பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 40 | பொருத்தமற்றது. அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரிடையே வெற்றிடங்களுக்கமையத் தெரிவு மேற்கொள்ளப்படும் |
| அனுபவம் | 55 | |
| நேர்முகத் தேர்வில் காட்டும் தேர்ச்சி | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

**தேவையான ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 03 வருடகாலத்துக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல உடல் நிலையைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) 2019.08.01 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் பதவி வகிப்போருக்கு இந்த உச்ச வயதெல்லை பொருந்தாது)

(v) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரர்கள் உரிய பதவிகளுக்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(vi) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

(vii) அரச அல்லது மாகாண அரச சேவை கூட்டுத்தாபனச் சேவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டவராகவோ அல்லது பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராகவோ இருத்தல் கூடாது.

(viii) ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையில் தற்போது சமயோசித, பதிலீட்டு, தற்காலிக அல்லது ஒப்பந்த, தன்னார்வ அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும்.

**சேவை நிபந்தனைகள் :**

(i) இந்தப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது.

(ii) விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படுபவர் மூன்று வருட காலத் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுவார்.

(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது அரச திணைக்களங்கள் அல்லது ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை காலத்துக்குக் காலம் வதிக்கும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமையச் செயற்படுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாக 12" x 8" அளவுள்ள தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2019, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை, தித்தபஜ்ஜல, வெரல்லகம" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது நேரில் கையளித்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற மற்றும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். ஏற்கனவே அரச சேவை அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ்கள் ;
3. சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ;
4. தொழில் தேர்ச்சிகளை உறுதிப்படுத்தும் தேவையான சான்றிதழ்கள் ;
5. ஏனைய தகைமைகளையும் அனுபவத்தையும் காட்டும் சான்றிதழ்கள் ;
6. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரது சான்றிதழ். பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திக் கையொப்பமிட்டது ;
7. அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் ;

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், தாமதப்படுத்தும் அல்லது இந்த விளம்பரத்தை இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

சீ. பீ. நவரத்ன,
செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
தித்தபஜ்ஜல,
வெரல்லகம,
2019, ஒகத்து 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை**

.................................................. **பதவிக்கான விண்ணப்பம்**

01. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்: ..........................................................................................

02. அஞ்சல் முகவரி : ..............................................................................................................

03. பிறந்த திகதி : ஆண்டு : .................. மாதம் : .................. திகதி : ..................

04. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : ................. மாதங்கள் : ................. நாட்கள் : .................

05. பால் : ஆண் / பெண் : .......................

06. விவாகமானவர்/விவாகமாகாதவர் : ..................................................................................

07. தேசிய ஆளடையாள அட்டை இல. : ..................................................................

08 நீர் இலங்கைப் பிரசையாயின், வம்சாவழி மூலமா? அல்லது பதிவின் மூலமா? : ..................................

09. ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவுக் காலம் : .......................

10. கல்வித் தகைமைகள் :
வருடம் .......................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

11. ஏனைய தகைமைகள் : ...............................................................................................

12. சேவை அனுபவம் : ...............................................................................................

13. ஏதும் குற்றங்களுக்கென எப்போதாயினும் குற்றவாளியாகக் கருதப்பட்டுத் தண்டனை பெற்றவராயின் அது பற்றிய விபரம் : ...............................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி ................................

08 - 950

## எல்பிட்டிய பிரதேச சபை

தென்மாகாண அரசாங்க சேவை வெற்றிடங்களை நிரப்புதல்

எல்பிட்டிய பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள தென்மாகான அதிகாரப் பரப்பினுள் நிரந்தர வதிவிடதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | மாதாந்த சம்பள அளவு | ஆட்சேர்பதற்குத் தேவையான ஆகக் குறைந்த/மேலதிக கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| வேலை/வெளிக்கள தொழிலாலி தரம் III | 02 | PLI - 2016 Grade III ரூபா 24250 - 250 x 10 - 270 x 10 - 300 x 10 - 330 x 12 - ரூபா 36410/- | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்து இருத்தல் |
| சுகாதாரத் தொழிலாலி தரம் III | 01 | PLI - 2016 Grade III ரூபா 24250 - 250 x 10 - 270 x 10 - 300 x 10 - 330 x 12 - 36410/- | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்து இருத்தல் |
| அலுவலக உதவியாளர் | 01 | PLI - 2016 Grade III ரூபா 24250 - 250 x 10 - 270 x 10 - 300 x 10 - 330 x 12 - 36410/- | கல்விப் பொதுத் தராதர (சா/ த) பரீட்சையில் ஆகக் குறைந்தது இரண்டு அமர்வுகளில் 06 பாடங்கள் சித்தியடைந் திருத்தல் |

**02. வயது எல்லை :**

(i) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**03. பொதுவான தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் வம்சா வழியாக அல்லது பதிவு செய்வதன் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் தென் மாகான சபை அதிகாரப் பரப்பினுள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு மூன்று வருட காலங்களாக நிரந்தர குடியாக இருத்தல் வேண்டும். வதிவிடத் தொகுதியில் கிராம உத்தியோகத்தரால் வழங்கிய சான்றிதல் பத்திரம் உரிய பிரதேச செயலாளரால் துணையொப்பமுடன் நிரூபித்தல் அவசியம் ;

(iii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவர்களாகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்டால் ஒரு மாத காலத்தினுள் அரச மருத்துவ பரிசோதனைக்கு உட்படுவதுடன் அப் பரிசோதனையில் உடல்நிலையில் தகுதியற்றவர் என தெரிந்தால் நியமனம் இரத்துச் செய்யப்படும் ;

(iv) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக கண்டு தண்டனை பெற்ற ஒருவர் அல்லது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் இருந்து நீக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(v) விண்ணப்பதாரிக்குரிய பதவிக்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த கல்வித்தகைமை இருத்தல் வேண்டும்.

**04. பொதுவான நிபந்தனைகள்:**

(i) விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது இடைப்பட்ட கால எல்லையில் அல்லது ஆட்சேர்ப்புச் செய்தலை தாமதப்படுத்தல் அல்லது மாற்றம் செய்தல் அவ் அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்யும் உரிமை அல்பிட்டிய பிரதேச சபையின் செயலாளருக்கு உரித்தானதாகும் ;

(ii) தற்போது அல்பிட்டிய பிரதேச சபையில் பணியாற்றும் நிரந்தர, மாற்றுவழி ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**05. பணிக்கமர்த்தும் நியதிகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானது ;

(ii) ஓய்வூதியம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்ளை ரீதியான தீர்மானத்திற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும் ;

(iii) இவ் நியமனம் மூன்று வருடத்திற்கு தகுதிகூர் நிலையில் இருத்தல் வேண்டும்.

**06.** இவ் ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைக் குடியரசின் தாபனவிதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களுக்கும் தென் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் கட்டளைகளுக்கும் மேல் மாகாண சபை அல்லது தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற விதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் அமைவாக சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

**07. ஆட்சேர்ப்பு முறை:**

I. தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**08. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை:**

விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உறுதிப்படுத்திய நிழற்பிரதிகளையும் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. அடையாள அட்டையின் பிரதி ;
3. கல்விச் சான்றிதழ்/பாடசாலை விட்டுச் செல்லும் சான்றிதழ் ;
4. வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (வதிவிடத் தொகுதியில் கிராம உத்தியோகத்தரால் 06 மாத காலத்திற்குள் வழங்கப்பட்டு உரிய பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தி கையொப்பமிட்டு இருத்தல் வேண்டும்.);
5. அண்மைக்காலத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள் ;
6. தொழில் தகைமை அல்லது அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்) ;
7. சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்;

இவ் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019. 09.06 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக கூடியவாறு எல்பிட்டிய பிரதேச சபை, எல்பிட்டிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும் (விண்ணப்பப்படிவங்கள் A4 அளவுள்ள கடதாசியில் தயாரித்தல் வேண்டும்). பூரணப்படுத்தாத, தெளிவற்ற மற்றும் கூறப்பட்ட தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்த வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
எல்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
எல்பிட்டிய,
2019.08.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அல்பிட்டிய பிரதேச சபை**

01. பெயர்: ....................................................................................................................

02. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் : ..........................................................................

03. நிரந்தர முகவரி : ...............................................................................................................

04. பிறந்த திகதி : ஆண்டு : .................. மாதம் : .................. திகதி : ..................

05. தேசிய ஆளடையாள அட்டை இல. : ......................................................................

06. தொலைபேசி இலக்கம் : ........................

07. பால் : ஆண்/ பெண் : ........................

08. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : .................. மாதங்கள் : .................. நாட்கள் : ..................

09. விவாகமானவரா? விவாகமாகாதவரா? : ....................................

10. இனம் : ..........................................

11. நீங்கள் இலங்கை பிரசையாயின் வம்சா வழியாகவா? பதிவின் மூலமாகவா? : .............................................

12. கல்வித் தகைமைகள் (சித்தி பரீட்சைகளின் விபரங்கள்) :

i. சித்தியடைந்த ஆண்டு /தரம்

ii. க. பொ. த. (சா. த.) பரீட்சை : ....................................

சுட்டெண் : ....................................

பரீட்சை நடாத்திய ஆண்டு மற்றும் மாதம் : ....................................

சித்தியடைந்த பாடங்கள் : ....................................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

iii. க. பொ. த. (சா. த.) பரீட்சை : ...............

சுட்டெண் : ...................................

பரீட்சை நடாத்திய ஆண்டு மற்றும் மாதம் : ...................................

சித்தியடைந்த பாடங்கள் : ...................................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

13. தொழில்சார் மற்றும் ஏனைய தகைமைகள் : (சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) .............................

14. சேவை அனுபவங்கள் : ...........................................................................................................

15. நீதிமன்றம் ஒன்றினால் ஏதேனுமொரு குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டுள்ளதா? : ............................................

அப்படியெனில் விபரங்கள் : .....................................................

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதிப்படுத்துகிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும், நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டின் பதவி நீக்கத்திற்கு ஈட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

................................,
விண்ணப்பத்தாரியின் கையொப்பம்

திகதி ................................

08 - 952

---

## வீரகெட்டிய பிரதேச சபை

தென் மாகாண அரசாங்க சேவையில் (உள்ளூராட்சி) நிறுவனமயப்படுத்தப்பட்ட கனிஷ்ட சேவையாளர் சேவையில் முதன்மை கைவினையாளர்/அரை கைவினையாளர்/கைவினையாளரல்லாத பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

| தொடர் இல. | பதவி | தரம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள விபரம் | கல்வித்தரம்/தொழில்சார் தகைமையும் அனுபவமும் | கைவினைத்திறன் திறமை |
|---|---|---|---|---|---|---|
| 01. | சாரதி | III | 02 | PL - 3 2016 ரூபா 25,790 10x270- 10x300- 10x330- 12x350- ரூபா 38990/ | கல்விப்பொதுத் தராதர (சாதாரண) தராப் பரீட்சையில் 02 அமர்வுகளுக்குள் ஏதேனும் 06 பாடங்கள் சித்தி அடைந் திருத்தல் வேண்டும் | பதவி வெற்றிடங்கள் நிலவும் மோட்டார் வாகன வகைகள் உட்பட, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மூலம் வழங்கப்பட்ட கனரக வாகன உரிமமொன்று கிடைக்கப் பெற்றதன் பின், குறைந்தது 03 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவி | தரம் | வெற்றிடங்களின் தொகை | சம்பள விபரம் | கல்வித்தரம்/தொழில்சார் தகைமையும் அனுபவமும் | கைவினைத்திறன் திறமை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | இதற்காக 2009 ஆம் வருட 08 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்கு வரத்துச் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட DE அல்லது J வகுப்பு உரிமமொன்றைப் பெற்றிருத்தல் கட்டாயமில்லை. இன்னும் மேற்படி சட்டவாக்கில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களுக்கு கீழ்படிதல் வேண்டும். |
